பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 20 செவ்வாய்க்கிழமை 03.02.2026 | அதிர்வு 186

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்

மோட்டார் சைக்கிள் ஒன்று மின் கம்பத்தில் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தம்புள்ளை, இனாமலுவ பிரதேசத்தில் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து சிறீதரன் விடுவிப்பு

## அரசமைப்புக் கவுன்ஸிலிருந்து அவர் விலகும் வரை அந்தப் பொறுப்பு இரா.சாணக்கியனிடம் ஒப்படைப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விடுவிக்கப்பட்டார். அவர் அரசமைப்பு கவுன்ஸிலின் உறுப்பினர் பதவியில் இருந்து இராஜிநாமாச் செய்கின்ற வரைக்கும் தற்காலிக ஏற்பாடாக தமிழரசுக் கட்சியின் மற்றைய முன்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏற்கனவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றுபவருமான சாணக்கியன் இராசமாணிக்கம் நாடாளுமன்றக் குழுத் தலைவருக்கான கடமைகளைப் பொறுப்பெடுப்பார் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் தெரிவித்திருக்கின்றனர்.

03

## திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்:

# விளக்கமறியலில் இருக்கும் இரு பிக்குகளினதும் ரிட் மனுக்கள் மேன்முறையீட்டு மன்றால் தள்ளுபடி

திருகோணமலை நகரக் கடற்கரையில் புத்தர் சிலை நிலை நிறுத்திய விவகாரம் தொடர்பாக திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த விளக்கமறியல் உத்தரவின் சட்டப் பூர்வத்தன்மையை எதிர்த்து, வண. பலாங்கொட கஸ்ஸப தேரர் உட்பட இரண்டு பௌத்த பிக்குகள் தாக்கல் செய்த ரிட் மனுக்களை மேல்முறையீட்டு நீதிமன்றம் இன்று தள்ளுபடி

03



# நாளைய கரிநாள் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்குங்கள்!

## சிவஞானம் சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்




(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் கிடைக்காத நிலையில் நாளைய தினம் கரிநாளாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் நாளை முன்னெடுக்கும் போராட்டமானது மிகவும் பெறுமதியானயானது. இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று காலை அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் இனப்படுகொலை செய்யப்பட்ட இனம். நாம் இந்த நாட்டில் சமஷ்டி முறையில் நிம்மதியாக வாழ வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் 7 ஆண்டுகளைத் தாண்டியும் தீர்க்கப்படவில்லை.

எனவே, இலங்கையின் சுதந்திர தினமான நாளை இடம்பெறும் கரிநாளுக்கு வர்த்தக சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்." – என்றார்.



# மஹிந்தவுடன் எவ்.சி.ஐ.டி. வந்து வாக்குமூலம் வழங்கிய ஷிராந்தி

## நாமலும் சி.ஐ.டியில் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, இன்று காலை பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவருடன் மஹிந்த ராஜபக்ஷவும் வருகை தந்திருந்தார். பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு வளாகத்தில் ஆதரவாளர்களும் திரண்டிருந்தனர். ஷிராந்திக்கு ஆதரவாக கோஷங்களும் எழுப்பப்பட்டிருந்தன. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இன்று காலை குறித்த காரியாலயத்துக்கு வருகை தந்த ஷிராந்தியிடம் சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கும் மேலாக அதிகாரிகள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த விசாரணைகளின் போது பதிவு செய்யப்பட்ட நீண்ட வாக்குமூலத்தை அடுத்து, அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

சிறிலிய கணக்கு தொடர்பான விசாரணைகளுக்காக அவர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் வழங்கிய வாக்குமூலத்தின் விவரங்கள் குறித்து மேலதிக தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. எனினும், நீண்ட நேர விசாரணைகளின் பின்னர் அவர் எவ்வித தடையுமின்றி அங்கிருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நாமல் ராஜபக்ஷ எம்.பி., குற்றப் புலனாய்வு பிரிவில் இன்று முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார். பாதாளக் குழு உறுப்பினர் கெஹெல் பத்ர பத்மேவுடன் தொடர்புள்ளதா என்பது பற்றி விசாரிக்கவே அவர் அழைக்கப் பட்டிருந்தார்.

## மோ. சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்புள்ளை பிரதேசத்தில் இருந்து ஹபரண பிரதேசம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் அதிக வேகத்தில் சென்றதன் காரணமாக வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது பாதையை விட்டு விலகி அருகில் உள்ள மின் கம்பம் ஒன்றில் மோதியுள்ளது.

இதன் காரணமாகப் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 22 வயது இளைஞரைத் தம்புள்ளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் ஏற்கனவே அவர் உயிரிழந்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பாக தம்புள்ளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பேராதனைப் பல்கலையில் குளவி கொட்டி காயமடைந்த 8 பேர் மருத்துவமனையில்!

குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்த பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள், ஊழியர்கள் உட்பட 8 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்துக்கு அருகில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 8 பேரும் பேராதனை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் 6 பேர் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் இருவர் என 8 பேர் குளவிக்கொட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கலைப்பீடத்தின் அருகே எந்தக் குளவிக்கூடுகளும் காணப்படவில்லை எனப் பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



இருப்பினும், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அக்பர் பாலத்தின் கீழ்ப் பகுதியில் குளவிக்கூடுகள் இருப்பதாகவும், வழக்கமாகப் பொதுப் பட்டமளிப்பு விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே, அந்த குளவிக் கூடுகளை அகற்ற பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது 8 பேரை குளவிகள் தாக்கியதையடுத்து, குளவிக கூடுகள் உள்ள இடங்களை கண்டறிந்து, அவற்றை நீக்குவது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி சத்தியபாமா நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ல.ஜெனனியும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் குமாரசாமி சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



## விளக்கமறியலில்...

செய்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய இரண்டு நீதியரசர்கள் கொண்ட

அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

புத்தர் சிலை நிறுவுதல் தொடர்பாக கடலோர பாதுகாப்பு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் துறவிகளை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட திருகோணமலை நீதிவான் பிறப்பித்த விளக்கமறியல் உத்தரவின் சட்டப் பூர்வத்தன்மையை சவாலுக்கு உட்படுத் தித் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களே தள்ளுபடி செய்யப்பட்டன.

மனுதாரர்கள் சார்பாக மனோகர டி சில்வா மற்றும் உதித இகலஹேவா ஆகியோர் ஆஜரானனர். மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஷானில் குலரத்னவுடன் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விக்கும் டி அப்ரூ, அரச சட்டத்தரணிகள் தாரக கோடகொட ஜெமியா சௌராஜ் ஆகியோர் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரானார்கள்.

## நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இருவரின் ஒப்பத்துடனும் இது தொடர்பான கடிதம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்குப் பிரதியிட்டு சபாநாயகருக்கு இன்று அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இத்தகைய முடிவு எடுக்கப்பட்டிருப்பது பற்றிய தகவல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிறீதரன் உட்பட எட்டு எம். பிக்களுக்கும் கட்சி செயலாளரால் இன்று காலை உத்தியோபூர்வமாக அறிவிக்கப் பட்டதாக அறியவந்தது.

இது தொடர்பாக கட்சியின் எம்.பிக்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கட்சிச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருக்கின்றவை வருமாறு:–

“வணக்கம்!

எமது அரசியல் குழுவின் முடிவின்படி அரசமைப்புப் பேரவையிலிருந்து இராஜிநாமாச் செய்யும்படி கௌரவ சிறீதரன் அவர்களுக்கு பணிப்புரை வழங்கியிருந்த போதும் அவர் அதனைச் செய்யாதிருந்த காரணத்தினால், கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் தொடர முடியாது என்று கடந்த ஜனவரி 24ஆம் திகதி நடந்த அரசியல் குழுக் கூட்டத்தில் அவருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகும் ஒரு வார கால அவகாசம் தலைவரின் ஆலோசனைப்படி வழங்கப்பட்டது. தொடர்ந்தும் அவர் கட்சியின் பணிப்புரையை மீறுகின்றபடியால் தலைவரும் நானும், அரசியல் குழுவின் முடிவின் பிரகாரம், கௌரவ சிறீதரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் தொடர மாட்டார் என்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்திருக்கிறோம்.

அவர் அரசமைப்புப்பேரவையிலிருந்து இராஜிநாமாச் செய்கின்ற வரைக்கும் தற்காலிக ஏற்பாடாக எமது கட்சியின் மற்றைய முன் வரிசை உறுப்பினரும் ஏற்கனவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றுபவருமான கௌரவ சாணக்கியன் இராசமாணிக்கம் அவர்கள் நாடாளுமன்றக் குழுத் தலைவருக்கான கடமைகளைப் பொறுப்பெடுப்பார்.

தலைவரின் அறிவுறுத்தலின்படி இதனை அறிவிக்கின்றேன்.” –

– என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.




# பொது இடங்களில் துப்பினால் இனி கடும் சட்ட நடவடிக்கை!

## தவிசாளர் வினோராஜ் தெரிவிப்பு

**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட நகரப் பகுதிகளில் போதை பாவனைக்கு எதிரான செயற்பாடுகள் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் உள்ள பொதுச் சந்தை மற்றும் பிரதான வீதியில் உள்ள கடைகள் போன்றவற்றில் வெற்றிலை சப்பி மெல்லுவது, மது அருந்துவது, புகை பிடிப்பது, போன்றவற்றை தடுக்கும் வகையில் விழிப்பூட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் பொதுமக்கள் இவ்வாறு மேற்கொள்வார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எவராயினும் இவ்வாறான போதை பாவனை செயற்பாடுகளிலே ஈடுபடுகின்ற போது போது சுகாதார பரிசோதகர் ஊடாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த செயற்பாட்டில் தவிசாளர் மே. வினோராஜ், பொது சுகாதார பரிசோதகர், பிரதேச சபையினுடைய உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தடுமாறும் ஆட்சிப் பீடம்

கடந்த பொதுத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சிகளை எல்லாம் தேசிய மக்கள் சக்தி கூட்டித் தள்ளி ஒரு பக்கம் புறம் ஒதுக்கி விட்ட நிலையில், நாடாளுமன்றுக்குச் செல்லும் வாய்ப்பையே இழந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், சற்றுக் காலம் ஆசுவாசமாக அடங்கி இருந்தார்கள். இப்போது மீண்டும் அரசியல் களத்தில் முனைப்புடன் - ஆரவாரமாக - அவர்கள் நகரத் தொடங்கி இருக்கிறார்கள். அதில் ஒருவர் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

தற்போதைய அரசின் 'பரிதாப நிலைமை' குறித்து கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் வெளியிட்டுள்ள சில தகவல்கள் இப்போது கவனத்திற்குரியவையாகின்றன.

✯ ஆட்சிக்கு வந்தவுடன் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் ஒன்றரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் மாகாணசபைத் தேர்தல் குறித்து முன்னேற்றகரமான தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை. மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் படுதோல்வியடைவோம் என்பதை அரசாங்கம் நன்கு அறியும். அதனால் அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் ஓடி ஒளிக்கின்றது.

✯ தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி இருபது சதவீதமளவுக்கு குறைவடைந்துள்ளது.

✯ புதிய கல்வி மறுசீரமைப்பு பிற்போடப்பட்டமைக்கும். எதிர்க்கட்சிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. கல்வி மறுசீரமைப்பைப் பிற்போடுமாறு நாங்கள் குறிப்பிடவில்லை. குறைபாடுகளைத் திருத்திக் கொள்ளுமாறு மாத்திரமே குறிப்பிட்டோம். பாடத்திட்டம் தயாரிப்பின்போது தோற்றம் பெற்ற குறைபாடுகள் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களினால் புதிய கல்விக் கொள்கை 2027 ஆம் ஆண்டுவரை பிற்போடப்பட்டாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்கள். ஆனால் கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்துவதாக பிரதமர் குறிப்பிடுகிறார்.

✯ மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தின் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதி செயற்படுகின்றமையால் ஜனாதிபதியின் அறிவிப்புக்களை கவனத்திற்கொள்ள வேண்டாம் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆளுங்கட்சியின் உறுப்பினர்களுக்கு குறிப்பிட்டுள்ளனர் என அறிய முடிகிறது.

- உதய கம்மன்பில வெளியிடும் இந்தத் தகவல்கள் முற்றிலும் உண்மை என்று கூறிவிட முடியாது. எனினும் அவற்றில் அடங்கியுள்ள விடயங்களை முழுமையாகப் புறமொதுக்கி விடவும் முடியாது என்பதுதான் முக்கியம்.

ஒன்றரை ஆண்டுகள் தாண்டுவதற்குள் இந்த அரசுத் தலைமையின் போக்கும் செயற்பாடுகளும் தளர்வடையத் தொடங்கியிருக்கின்றன என்பது தென்னிலங்கை அரசியலில் அப்பட்டமாக பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது.



# ஒலுவில் ஷஹ்வா பெண்கள் அரபுக் கல்லூரிக்குக் கணினிகள்!

(நூருல் ஹுதா உமர்)

ஒலுவில் ஷஹ்வா அரபுக் கல்லூரியின் நீண்ட நாள் தேவையாக இருந்த நவீன தொழில்நுட்ப பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான கணினிகளின் தேவை குறித்து கல்லூரி நிர்வாகம் விடுத்த வேண்டுகோளின் பேரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனால் இரண்டு கணினிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினரும் கட்சியின் பிரதி செயலாளருமான எம்.ஏ. அன்சில், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எம்.சிறாஜ், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் எஸ். முஹம்மட் அலி ஜின்னா, கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# புலமைப் பரிசில் பரீட்சை தேவையற்ற ஒன்று!

## கல்முனையில் கலாநிதி செந்தில்நாதன் கருத்து

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை கல்வித் துறையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தேவையற்ற ஒன்று. உளவியலுக்கு அப்பாற்பட்ட ஒரு அழுத்தம். இதனை நீக்கி எட்டாம் ஆண்டில் மாற்றுவது பொருத்தமானது.

இவ்வாறு நியூசிலாந்தில் வாழும் பாண்டிருப்பின் முதல் கலாநிதி சாமித்தம்பி செந்தில்நாதன் தெரிவித்தார்.

கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில், பாண்டிருப்பின் முதல் கலாநிதி சாமித்தம்பி செந்தில்நாதன் மற்றும் கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினரும் கனடாவில் இருந்து பல்வேறு சமூகப்பணிகளுக்கு உதவுபவருமான நோ. விஜயரெட்ணம் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த கௌரவிப்பு நிகழ்வு கல்முனை நெற் தலைமையகத்தில் தலைவர் புவி.கேதீஸ் தலைமையில் நடைபெற்றது.

அங்கு கலாநிதி செந்தில்நாதன் மேலும் பேசுகையில்,

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வயதுக்கு முற்றிலும் பொருத்தம் இல்லாத ஒன்று. பெற்றோர் பரீட்சையாகவே அதனைக் கருத வேண்டி இருக்கிறது.

இது தொடர்பாக விரைவில் இலங்கை அரசுக்கு ஆய்வுக் கட்டுரையை அனுப்பவிருக்கிறேன்.

நான் கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றிய காலத்தில் பொருளியல் பாடத்தில் ஒரு அலகில் ஏற்பட்ட ஐயப்பாட்டை கட்டுரையாக எழுதி இருந்தேன். இங்கு யாருமே அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக கிண்டல் அடித்தார்கள். ஆனால் அதே விடயம் சில வருடங்களில் அவுஸ்திரேலியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்று அது பிரபலமாக இருக்கின்றது.

சவால்களை முகங்கொள்ளும் ஆற்றலை பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கற்பதற்கு உவப்பான சூழல் அவசியம். அதனைப் பெற்றோர்கள் உருவாக்கிக்கொடுக்க வேண்டும்.- என்றார்.

கல்முனை நெற் ஊடக ஆலோசகரும் ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளருமான விரி. சகாதேவராஜா பாராட்டுரையை வழங்கினார்.



# காரைதீவு பிரதேசத்தில் மூவருக்கு சுவதம் விருது இன்று வழங்கல்!

**(நூருல் ஹுதா உமர்)**

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று கலைஞர்களுக்கு சுவதம் விருது வழங்கி வைக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையில் மாவட்ட செயலகமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலைஞர்களுக்கு கலைஞர் சுவதம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் இன்று (03) காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ. அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ். சுதர்சனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலக்கிய சேவைக்காக எழுத்தாளர் நூருல் /ஹதா உமர், இசை கலைஞர்களான சுதாகரன் லோவிகரன், லோககேசரம் லோஜினி ஆகிய மூன்று கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் சுவதம் விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபர் எஸ். ஜெகராஜன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.ரிம்ஸான், காரைதீவு பிரதேச செயலக கணக்காளர் திருமதி றிம்ஸியா, அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# தேசிய ரீதியாகச் சாதித்த புங்குடுதீவு மத்தி உதைப்பந்தாட்ட அணியினருக்கு வரவேற்பு!

(த.சுபேசன்)

அகில இலங்கை ரீதியாகப் பாடசாலைகளுக்கு இடையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற 16 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்துக்கு யாழ். புங்குடுதீவு மத்திய கல்லூரி அணி வரலாற்றில் முதற்தடவையாக முன்னேறியதையடுத்து அந்த மாணவர்களுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மிக பிரபல்யமான பாடசாலை அணிகளைத் தோற்கடித்து யாழ். மாவட்டத்தின் கிராமப்புற பாடசாலை அணிகளான வசாவிளான் மகா வித்தியாலயம் மற்றும் புங்குடுதீவு மத்திய கல்லூரி ஆகியன இறுதிப் போட்டிக்கு தெரிவாகி அதில் வசாவிளான் மகாவித்தியாலய அணி 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றிருந்தது.

தீவகம் மற்றும் புங்குடுதீவு வரலாற்றில் முதல்முறையாக தேசிய ரீதியிலான உதைபந்தாட்ட தொடரில் இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய சாதனையை இந்த முறை புங்குடுதீவு மத்திய கல்லூரி படைத்துள்ளதையிட்டு தீவகம் முழுவதும் ஆர்ப்பரிப்பாக காணப்பட்டது.

இறுதிப்போட்டியில் வசாவிளான் மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல்களின் அடிப்படையில் சாம்பியன் கிண்ணத்தை வென்றிருந்தாலும் முதன்முறையாக தேசிய மட்டத்தில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய புங்குடுதீவு மத்திய கல்லூரியின் வீரர்களை வரவேற்கும் நிகழ்வு புங்குடுதீவு பொது அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், நலன்விரும்பிகளின் ஏற்பாட்டில் வேலணை வங்களாவடி சந்தியிலிருந்து புங்குடுதீவு மத்திய கல்லூரிவரை இடம்பெற்றது.

புங்குடுதீவு உலக மையம் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் செயலாளர் கருணாகரன் குணாளனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கான நிதி அனுசரணையை

புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய நிரந்தர தர்மகர்த்தா குடும்பத்தின் சார்பில் திருமதி. வசந்தி இராசரெத்தினம், புங்குடுதீவு கண்ணகை கோவிலடி அன்னதான மண்டப உரிமையாளரான முத்தையாபிள்ளை ராமச்சந்திரன் குடும்பத்தினர் மற்றும் புங்குடுதீவு உலக மையம் நிர்வாக குழு உறுப்பினர் கருணாகரன் நாவலன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

புங்குடுதீவு மத்திய கல்லூரியின் ஆண், பெண் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட அணிகளின் வளர்ச்சிக்காகவும் பாடசாலை மைதானத்தின் அபிவிருத்திக்காகவும் புங்குடுதீவு உலக மையம் தொடர்ச்சியாக பாடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# சுதந்திர தின ஏற்பாடுகள் அம்பாறையில் மும்முரம்!

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தில் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திர தின நிகழ்வுகள் விமர்சையாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளை அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களில் கொடிகள் ஏற்றப்பட்டு கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் மருதமுனை, பெரியநீலாவணை, கல்முனை, நற்பிட்டிமுனை, சவளக்கடை, சம்மாந்துறை,



சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பளம், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட பகுதிகளில் தேசிய கொடிகள் ஏற்றப்பட்டுள்ளன.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் தேசிய கொடி விற்பனையும் அமோகமாக இடம்பெற்று வருகிறது.

மேலும் பொலிஸ் நிலையங்கள், வங்கிகள், பிரதேச செயலகங்கள், பொது இடங்களில் தேசிய சுதந்திர தின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. சில இடங்களில் வாகன ஊர்வலங்களும் இடம்பெறவுள்ள நிலையில் பொலிஸார் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.





# தொழிலாளரை ஏற்றிச் சென்ற டிராக்டர் கவிழ்ந்து விபத்து!

**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

தலவாக்கலையில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற டிராக்டர் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

தலவாக்கலை, லோகி தேயிலை தொழிற்சாலை அருகே, தோட்டத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற டிராக்டர் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பல தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை பணி முடிவடைந்த பின்னர், தொழிலாளர்கள் டிராக்டரின் பின்புற டிரெய்லரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, வாகனத்தின் கட்டுப்பாடு இழந்ததால் அது கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்களை ஏற்றிச் செல்ல பொருத்தமற்ற வாகனங்களை பயன்படுத்துவதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் உயிர்களுக்கு உத்தரவாதமில்லாத இவ்வாறான பாதுகாப்பற்ற முறையில் டிராக்டர் வாகனங்களில் கொண்டு செல்லும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்குப் பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையான போக்குவரத்து சேவை ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விபத்து தொடர்பாக தலவாக் கலை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருவதுடன், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# சமுர்த்தி வாழ்வாதார திட்டத்தில் சிகை அலங்கார நிலையம் திறப்பு!



**(நவாஸ்)**

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலில் நகர்பிரிவு–3 கிராமசேவகர் பிரிவில் சமுர்த்தி வாழ்வாதார சுய தொழில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிகை அலங்கார நிலையத்தை சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஃமத்தூல்லாஹ் இன்று திறந்து வைத்துள்ளார்.

இதில் திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், ஓய்வு பெற்ற முகாமையாளர் எம்.ஏ. இமாமுத்தீன், பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.ஐ.ஜாபீர் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.



# அட்டாளைச்சேனையில் ‘ரண்பிம’ வீடமைப்பு ஆதம்பாவா எம்.பியால் ஆரம்பித்து வைப்பு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசின் “ரண்பிம” வீட்டுத்திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை சமூர்த்திப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஆதம்பாவா எம்.பியால் அட்டாளைச்சேனையில் நேற்று திங்கட்கிழமை இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சீ.அஹமட் அப்கர் தலைமையில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட்டின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கௌரவ அதிதிகளாகக் கணக்காளர் எம்.எப்.பர்ஹான், பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸவின் இணைப்பாளர் சுல்தான் சத்தார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஆசிரியர் எஸ்.எம்.ஆரிப் உள்ளிட்ட சமூர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், பிரஜா சக்தி தவிசாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# கம்பளையில் டித்வாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிகள்

**(நடராஜா மலர்வேந்தன்)**

டிட்வா புயல் பேரிடரால் கம்பளையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளைக் கருத்தில் கொண்டு, சமையலுக்குத் தேவையான காஸ் குக்கர், எலெக்ட்ரிக் கெட்டில் உள்ளிட்ட சமையல் உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இந்த மனிதாபிமான உதவித் திட்டமானது,

கனடா – பிரம்டன் தமிழ் ஒன்றியம், ஆஸ்திரேலியா – இந்திய வம்சவாளி இலங்கை தமிழர் அமைப்பு ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன்,

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்டது.

கம்பளை கங்கவட்ட வீதி, மார பகுதி, கம்பளவெல, பொரளமங்கட, பேராதெனிய உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இதன்மூலம் பயன்பெற்றனர்.

இந்த நிகழ்வு கம்பளை சபாயர் ஹில்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கம்பளை பிரதேச செயலாளர் ஆத்மா தில்ருக்ஷி, கம்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சர்வ மத தலைவர்கள்

ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மலையக கல்வி அபிவிருத்தி மன்ற உறுப்பினர்களோடு இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருள்களை வழங்கி வைத்தனர்.

அத்தோடு இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சபாயர் ஹில்ஸ் மண்டபத்தின் உரிமையாளர் டி. பிரகாஷ் மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.





# புத்தளம் கொத்தாந்தீவு வித்தி புலமையாளர்கள் கௌரவிப்பு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ் )**

புத்தளம் கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த புலமை மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு பாட சாலையின் அதிபர் ஐ.என்.எம். எம். லாஹிர் தலைமையில் புத்தளம் தெற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. எம். நௌஷாத்தின் வழிகாட்டலில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எம். ஜே. எம். பைசல், கௌரவ அதிதிகளாக புத்தளம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் என். டி. எம். தாஹிர் மற்றும் கற்பிட்டி பிரதேச சபை தவிசாளர் ஏ. எஸ். எம். றிகாஸ், விஷேட அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்களான கே. எம். எம். பைஸர் மரிக்கார், ஏ. ஜே. எம். றிபாஸ், ஏ. எச். எம். ஹாரூன் மற்றும் கொத்தாந்தீவு ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் கே. எம். இம்தியாஸ், பாடசாலையின் முன்னாள் அதிபர்களான எஸ். எம். எம். ஹனிபா, ஏ. எச். எம். ஹபீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# யாழ். முஸ்லிம்களது தேவைப்பாடுகள் ஆளுநரின் கவனத்துக்கு முன்வைப்பு!

## யாழ். மாநகர சபை உறுப்பினர் அப்துல்லாஹ் நடவடிக்கை

யாழ்ப்பாணம் மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் தேவைகள் தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் அப்துல்லாஹ் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் ஆகியோருக்கிடையே விசேட சந்திப்பு ஒன்று நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம் மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் இரு முஸ்லிம் பாடசாலைகளின் தேவைகள், கல்வி, மீள்குடியேற்றம், காணி, வீட்டுத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி தேவைகள் தொடர்பில் மாநகரசபை உறுப்பினர் அப்துல்லாஹ் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்கள் தொடர்பான கோரிக்கைகளை கேட்டு அறிந்து கொண்ட ஆளுநர், இந்த விடயங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் உரிய மத்திய மற்றும் மாகாண அரச திணைக்களங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனவும் உறுதியளித்தார்.



# வலி. வடக்கில் ஆக்கிரமித்த காணிகளில் பனைகளை இடித்து அழிக்கும் படையினர்

## ஆளுநர், அரச அதிபர், பனை அபிவிருத்திச் சபைக்கு முறையீடு

(ந.லோகதயாளன்)

வலிகாமம் வடக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் நிலங்களில் உள்ள பனை மரங்கள் படையினரால் கடந்த இரு தினங்களாக அடியோடு இடித்து அழிக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் மற்றும் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒருவர் தனது காணியில் நிற்கும் பனை மரத்தை தறிப்பதானாலும் பனை அபிவிருத்திச் சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றில் அனுமதி பெறவேண்டிய கட்டாயம் சட்டப்படி இருக்கின்றது.

ஆனால் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் எவரது அனுமதியும் இன்றி – நில உரிமையாளரின் ஒப்புதலும் இன்றி – பனைகளை அழித்து வருகின்றனர். இவை தொடர்பில் எந்த நடவடிக்கையும் பனை அபிவிருத்திச் சபை இதுவரை மேற்கொள்ளவில்லை என நிலத்தின் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின் றனர்.

வலி.வடக்கில் விடுவிக்கப்படாத நிலங்களில் காணப்படும் பனை மரங்கள் இரு தினங்களாக படையினரால் அழிக்கப்படுவது தொடர்பில் தற்போது பனை அபிவிருத்திச் சபை, மாவட்ட அரச அதிபர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகிய தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.



# தேர்தலுக்கான பணியிலிருந்து விலகுகின்றார் அண்ணாமலை

சிங்காநல்லூர், விருகம்பாக்கம் உள்ளிட்ட 6 தொகுதிகளின் தேர்தல் சுற்றுப்பயண பொறுப்பாளர் பணியிலிருந்து விலகுவதாக தமிழக பா.ஜ.க முன்னாள் தலைவர் அண்ணாமலை திடீரென அறிவித்துள்ளார்.

தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை உடனிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர்களை நியமித்து அறிவித்தார். அதன்படி, ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் 2 முதல் 7 தொகுதிகள் வரை ஒதுக்கப்பட்டிருந்தன.

அதில், அண்ணாமலைக்கு கோவை சிங்காநல்லூர், மதுரை தெற்கு, சென்னை விருகம்பாக்கம், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், குமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஆகிய 6 தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர் பணி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அண்ணாமலை அறிவித்துள்ளார்.



# தூய்மைப் பணியாளர் பத்மாவுக்கு தங்கச் சங்கிலி பரிசளித்தார் ரஜினி

தூய்மைப் பணியாளரான பத்மா என்ற பெண்ணின் நேர்மையை பாராட்டி நடிகர் ரஜினிகாந்த் தங்கச் சங்கிலி வழங்கி அவரை கௌரவித்துள்ளார்.

சென்னை திருவல்லிக்கேணி, பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்தவர் பத்மா (வயது 48), தூய்மைப் பணியாளர். இவர் தி.நகரில், வண்டிக்காரன் பகுதியில் கடந்த மாதம் 11 ஆம் திகதி பணியில் ஈடுபட்டிருந்தபோது, விதியில் கிடந்த பையை எடுத்துப் பார்த்துள்ளார்.

அதில், 45 பவுன் தங்க நகைகள் இருந்துள்ளது. உடனடியாக, நகையை பாண்டி பஜார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். விசாரணையில், அந்த நகைகள் நங்கநல்லூரை சேர்ந்த பரமேஷ் (வயது 46) என்பவருக்கு சொந்தமானது என தெரியவந்தது.

மேலும், மீட்கப்பட்ட நகை உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. குப்பையில் கிடந்த நகையை பொலிஸிடம் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் பத்மாவுக்கு பாராட்டுகள் குவிந்தன. இந்த தகவல் அறிந்த முதல்வர் ஸ்டாலினும் பத்மாவை பாராட்டி 1 லட்சம் இந்திய ரூபா காசோலையை அவரிடம் வழங்கினார்.

தொடர்ந்து, சென்னை மத்திய கோட்டத்தில் முதுநிலை அஞ்சல் கண்காணிப்பாளர் அலுவலகம் சார்பில் 'மை ஸ்டாம்பில்' பத்மாவின் ஃபோட்டோவுடன் அஞ்சல் தலை வெளியிட்டு கௌரவப்படுத்தியது.

இதனிடையே, இன்று நடிகர் ரஜினிகாந்த், தூய்மைப் பணியாளர் பத்மாவை நேரில் அழைத்து பாராட்டி கௌரவித்துள்ளார். மேலும், தங்கச் சங்கிலியையும் ரஜினிகாந்த் பரிசளித்துள்ளார்.





# அமெரிக்காவில் குடிவரவு அதிகாரிகள் உடல் கமராக்களை அணிவது கட்டாயம்

## புதிய உத்தரவு பிறப்பிப்பு

அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்தின் மினியாபோலிஸ் நகரில் குடிவரவு அதிகாரிகளால் இரண்டு குடிமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அங்குள்ள குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கத்துறை உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளும் உடனடியாக உடல் கெமராக்களை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் செயலாளர் கிறிஸ்டி நோம் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட அலெக்ஸ் ப்ரெட்டி என்ற தாதியிடம் ஆயுதம் இருந்ததாக அதிகாரிகள் முதலில் கூறினாலும், வெளிவந்த காணொளி ஆதாரங்கள் அவர் கையில் கைபேசி மட்டுமே இருந்ததை உறுதி செய்தன.

இந்த முரண்பட்ட தகவல்கள் மற்றும் பொதுமக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப இந்த உடல் கெமரா திட்டம் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்றும் இது தவறான தகவல்கள் பரவுவதைத் தடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# இங்கிலாந்து மருத்துவர்கள் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு

சம்பளம் மற்றும் பயிற்சி இடங்கள் தொடர்பாக அரசாங்கத்துடன் நீடித்து வரும் மோதலில், இங்கிலாந்தின் வதிவிட மருத்துவர்கள் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

பிரித்தானிய மருத்துவ சங்கம் நடத்திய இந்த வாக்கெடுப்பின் மூலம், தொழிற்சங்கம் அடுத்த 6 மாதங்களுக்குப் போராட்டங்களை நடத்த புதிய அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

இருப்பினும், போராட்டத்திற்கான திகதிகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

53 வீத உறுப்பினர்கள் பங்கேற்ற இந்த வாக்கெடுப்பில், 93 வீதம் பேர் போராட்டத்தைத் தொடர ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

கடந்த 2023 வசந்த காலத்தில் தொடங்கிய இந்த பிரச்சினையினால் இதுவரை 14 முறை வேலைநிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் 2.5 வீத சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

மருத்துவப் பயிற்சியின் இரண்டாம் ஆண்டிற்குப் பின்னர் விசேட பயிற்சிக்காக மருத்துவர்கள் விண்ணப்பிப்பார்கள்.

கடந்த ஆண்டு 10,000 இடங்களுக்கு 30,000-க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர். இந்த கடும் போட்டி தகுதியான மருத்துவர்களுக்கு வேலை கிடைப்பதைத் தடுப்பதாகத் தொழிற்சங்கம் கூறுகிறது.

இந்நிலையில் இது குறித்து சுகாதார மற்றும் சமூக பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில் ,

புத்தாண்டின் தொடக்கத்தில் இருந்தே பிரித்தானிய மருத்துவ சங்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம் எனவும் 2026-ஆம் ஆண்டில் மேலும் வேலை நிறுத்தங்கள் ஏற்படாத வகையில், அனைவருக்கும் ஏற்ற ஒரு சுமுகமான உடன்பாட்டை எட்டுவோம் எனவும் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.







இதற்கிடையில், ஸ்கொட்லாந்து அரசாங்கம் புதிய சம்பள சலுகையை வழங்கியதை அடுத்து, அங்குள்ள பிரித்தானிய மருத்துவ சங்க கிளை தனது வேலைநிறுத்தப் போராட்டத்தை ரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈரான் அணுசக்தி விவகாரத்தில் பதற்றத்தை தணிக்க ரஷ்யா முயற்சி



ஈரான் மற்றும் மேற்கத்தேய நாடுகளுக்கு இடையே அணுசக்தி விவகாரத்தில் நீடித்து வரும் பதற்றத்தை தணிக்க, ரஷ்யா தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஈரானிடம் இருக்கும் அணுசக்தி மூலப்பொருளான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை, ரஷ்யாவுக்கே கொண்டு வந்து சுத்திகரிக்கவோ அல்லது பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவோ தாங்கள் தயாராக இருப்பதாக ரஷ்யா மீண்டும் உறுதியளித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவிக்கையில்,

"ஈரானின் யுரேனியத்தை ரஷ்யாவுக்கு மாற்றிப் பாதுகாக்கும் திட்டம் நீண்ட நாட்களாகவே ஆலோசனையில் உள்ளது. ஈரான் மீது சில நாடுகளுக்கு உள்ள கவலைகளைப் போக்கவே இந்த யோசனையை ஒரு தீர்வாக ரஷ்யா முன்வைக்கிறது.

இப்போதுள்ள சூழலில், இதில் சம்பந்தப்பட்ட ஈரான், அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளுடனும் நாங்கள் பேசி வருகிறோம். மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றத்தைக் குறைத்து அமைதியை நிலைநாட்ட எங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்."- என்றார்.



# விரைவில் தி.மு.கவுடன் கூட்டணி பேச்சு: காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் தகவல்

ஓரிரு நாளில் தி.மு.க - காங்கிரஸ் இடையே கூட்டணி பேச்சுவார்த்தை தொடங்கும் என தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார்.

தி.மு.கவிடம் கொடுப்பதற்காக தாங்கள் போட்டியிட விரும்பும் 39 தொகுதிகளின் பட்டியலை காங்கிரஸ் தயாரித்துள்ளது.

டில்லியில் ராகுல் - கனிமொழி சந்திப்புக்கு பிறகு காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தைக்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம் பெற்றுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் செ.ராஜேஷ்குமார், அகில இந்திய செயலாளர்கள் சூரஜ் ஹெக்டே, நிவேதித் ஆல்வா ஆகியோர் சென்னை ஆழ்வார்பேட்டையில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினர்.

இதில் காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்புள்ள, ஒரு மக்களவை தொகுதிக்கு 1 சட்டப்பேரவை தொகுதி வீதம் 39 சட்டப்பேரவை தொகுதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆட்சி, அதிகாரத்தில் பங்கு கேட்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில், 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் பெயரில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியதை கண்டித்து பாதயாத்திரை நடத்துவது, அதற்கு தேசிய தலைவர்களை அழைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கிரிஷ் சோடங்கர், செல்வப்பெருந்தகை ஆகியோர் தலைமையில் நேற்று சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் செல்வப்பெருந்தகை செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"மகாத்மா காந்தி பெயரை ஊரக வேலை உறுதி திட்டத்திலிருந்து நீக்கியதை கண்டித்து 5 ஆம் திகதி மிகப்பெரிய பாதயாத்திரையை தொடங்க உள்ளோம். தமிழ்நாடு முழுவதும் 6 மண்டலங்களில் இந்த பாதயாத்திரை நடைபெற உள்ளது. இதில் தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்" - என்றார்.

தொடர்ந்து கிரிஷ் சோடங்கர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கூட்டணி பேச்சுவார்த்தை குறித்து தி.மு.க. எம்.பி கனிமொழியிடம் தொலைபேசியில் பேசினேன். இன் னும் ஓரிரு தினங்களில் தி.மு.கவுடன் கூட்டணி குறித்து பேச உள்ளோம்." - என்றார்.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 03/02/2026

ஒன்டாரியோவில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் மரணம்



03



# விசா மோசடிகள், போலி முகவர்கள் குறித்து சர்வதேச மாணவர்களுக்கு கனடா எச்சரிக்கை

கனடாவின் குடியேற்ற அமைப்பு (IRCC) சமீபத்தில் சர்வதேச மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பை வெளியிட்டு, விசா மோசடிகள் மற்றும் போலி முகவர்கள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்போது, மாணவர்கள் கல்வி அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி அனுமதி பெறுவதற்கான கட்டணம் 150 கனேடிய டொலர் என IRCC குறிப்பிட்டுள்ளது. விண்ணப்பத்தில் வழங்கப்படும் அனைத்து தகவல்களுக்கும் மாணவர்கள் பொறுப்பானவர்கள் தவறான தகவல் வழங்கினால் விசா மறுக்கப்பட்டு, 5 ஆண்டுகள் வரை கனடாவிற்கு நுழைய தடை விதிக்கப்படலாம். 02

# கனடா வாழ் தமிழருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

## *100 குழந்தைகள் மீது பாலியல் சுரண்டல்*

அமெரிக்காவில் சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டில், கனடாவின் ரொரன்ரோவில் வசிக்கும் 40 வயதான ரமணன் பத்மநாதன் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை பாலியல் ரீதியாக சீண்டியதாக தமிழரான ரமணனன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

சமூக ஊடகங்கள் மூலம் 100 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை இலக்காகக் கொண்டு பல ஆண்டுகளாக பாலியல் சுரண்டலில் ஈடுபட்டதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

டொராண்டோவைச் சேர்ந்த ரமணன் பத்மநாதன், அமெரிக்க ஃபெடரல் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று, குழந்தை ஆபாசப் படங்களைத் தயாரித்தல் மற்றும் ஒரு சிறுமியை வற்புறுத்தித் தூண்டிய குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டார்.

பத்மநாதன் ஏழு ஆண்டுகள் நீடித்த ஒரு திட்டமிட்ட சதித் திட்டத்தில் ஈடுபட்டார், அது அவர் கைது செய்யப்பட்ட 02






# கப்பம் கோரல் சம்பவத்துடன் தொடர்புடைய 3 பேர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கைது

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் சர்ரே நகரில் துப்பாக்கிச் சூடு நடந்த சம்பவம் தொடர்பாக மூன்று ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இரண்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம், அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கப்பம் கோரல் குறித்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை 4 மணிக்கு க்ரெசென்ட் பீச் பகுதியில் கப்பம் கோரல் எதிர்கொள்ளும் சிறப்பு பிரிவில் பணியாற்றும் அதிகாரிகள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, க்ரெசென்ட் ரோடு மற்றும் 132 ஸ்ட்ரீட் சந்திப்புக்கு அருகிலுள்ள ஒரு வீட்டின் வெளியே துப்பாக்கிச் சூடு நடந்ததுடன், சிறிய தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது.

அந்தப் பகுதியில் சந்தேகத்திற்குரிய ஒரு வாகனத்தை பொலிஸ் கண்டறிந்த போது, அதில் இருந்தவர்கள் வாகனத்தை விட்டு இறங்கி தப்பியோடியுள்ளனர்.

பின்னர் அவர்கள் ஒரு ரைடு-ஷேர் வாகனத்தில் ஏற முயன்ற நிலையில், பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த தீ விபத்தால் வீட்டிற்கு பெரும் சேதம் ஏற்படவில்லை என்றாலும், துப்பாக்கிச் சூட்டினால் வீட்டிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் கப்பம் கோரலுடன் தொடர்புடையதாக நம்பப்படுவதாகவும் பொலிஸ் கூறியுள்ளது. இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது .

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரே முடிவுக்கு வந்தது.

நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் நீதித்துறையின்படி, அவர் இளம் பெண்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக, ஒரு அமெரிக்க டீனேஜ் பையனாக நடித்து, ஒரு போலி இணைய அடையாளத்தை உருவாக்கினார்.

கனடாவில் இதே போன்ற குற்றங்களுக்காக முன்னர் தண்டனை பெற்ற ரமணன், சமூக ஊடகங்கள் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை பாலியல் ரீதியாக சீண்டியதாக அமெரிக்காவில் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை ரமணன் பத்மநாதன் ஏற்றுக்கொண்டுள்ளார் என கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க நீதித்துறை வெளியிட்ட ஒரு அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த டிசம்பர் மாதம் 3ஆம் திகதி ரமணன் பத்மநாதன் கைது செய்யப்பட்டார் என அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது.

## விசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசடி அறிகுறிகளில், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் ஏற்பு கடிதம் இல்லாமல் விண்ணப்பிக்கச் சொல்லுதல், பணம் கொடுத்தால் சேர்க்கை, scholarship அல்லது வேலை அனுமதி கிடைக்கும் என்று வாக்குறுதி, அனைத்து பாடப்பிரிவுகளும் Post-Graduation Work Permit பெறும் என தவறான தகவல், சமூக ஊடகங்கள் மூலம் ஆவணங்கள் அல்லது பணம் கேட்பது என சில விடயங்கள் அடங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், IRCC, மாணவர்கள் அனுமதியில்லாத முகவர்களை பயன்படுத்தக்கூடாது, நேரடியாக கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க வேண்டும் என்றும், சந்தேகத்துக்கிடமான செயல்பாடுகளை உடனடியாக முறைப்பாடளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், சர்வதேச மாணவர்கள் வெற்று படிவங்களில் கையொப்பமிடாமல், அனைத்து தகவல்களையும் சரிபார்த்து, பணம் செலுத்திய ரசீதுகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# ஒன்டாரியோவில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் மரணம்

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

ஹியர்ஸ்ட் நகரின் மேற்குப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலை 11 இல், ஒரு சரக்கு லொறி மற்றும் பயணிகள் வாகனம் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை 11 இல் நெடுஞ்சாலை 631 அருகே இந்த "கடுமையான விபத்து" நிகழ்ந்துள்ளது. சம்பவ இடத்திலேயே மூவர் உயிரிழந்தனர் என பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

உயிரிழந்தவர்களில், கெனோராவைச் சேர்ந்த 36 வயதுடைய ஆண் ஒருவர், கிரீன்ஸ்டோனைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் ஒருவர் மற்றும் கான்ஸ்டன்ஸ் லேக் பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவர் அடங்குகின்றனர்.

இந்த விபத்தில் வேறு யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என பொலிஸ் தெரிவித்துள்ளது.

விபத்தைத் தொடர்ந்து, விசாரணை காரணமாக ஹியர்ஸ்ட் மேற்கே உள்ள நெடுஞ்சாலை 631 முதல் லாங்லாக் அருகேயுள்ள நெடுஞ்சாலை 625 வரையிலான நெடுஞ்சாலை 11 பகுதி இரு திசைகளிலும் மூடப்பட்டது.

சுமார் 22 மணி நேரம் நீடித்த சாலை மூடலின் போது, தொழில்நுட்ப விபத்து விசாரணை அதிகாரிகள் மற்றும் மீளமைப்பு நிபுணர்கள் சம்பவ இடத்தில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

வீதி மூடல் நீண்ட நேரம் நீடிக்கும் என முன்னதாக எச்சரித்த பொலிஸ், மாற்று அவசர வழித்தடம் இல்லை என்றும் பொதுமக்கள் அந்தப் பகுதியை தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டிருந்தது.

விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை யார் ஓட்டினார், உயிரிழந்தவர்கள் எந்த வாகனத்தில் பயணம் செய்தனர் அல்லது வழக்கு பதிவு செய்யப்படுமா என்பது தொடர்பான கூடுதல் தகவல்களை பொலிஸ் இதுவரை வெளியிடவில்லை.

இந்த விபத்தை நேரில் கண்டவர்கள் அல்லது சம்பவ நேரத்தில் அந்தப் பகுதியில் பயணித்த வாகனங்களில் டாஷ் கேம் பதிவுகள் உள்ளவர்கள், ஒன்டாரியோ மாகாண பொலிஸை தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

